DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 377/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | இளவரசி | தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சந்திரசேகர் | ஜாதி |
| கிராமம் | : | | இனம் |
| தாலூக்கா | : | | வயது |
| Mail ID | : | | Mobile No. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செல்வபுரத்தில் வசித்து வருகிறேன். காட்டு வேலை செய்து வருகிறேன்

இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன்.கடந்த 2025 ம் வருடம் நானும் எனது மாமியார் சரஸ்வதி இரவு 9.00 மணியளவில் மளிகை கடைக்கு சென்ற விட்டு திரும்பி வரம் போது எங்கள் வீடடின் அருகில் சத்தம் கேட்டது. என்ன என்று போய் பார்த்த போது இரவு நேரம் என்பதால் கூட்டத்தில் தவறி விழுந்து விட்டேன். அதனால் எனக்கு இடுப்பில் மொக்கை காயம் ஏற்பட்டது. இடுப்பு வலி அதிகமாக இருந்ததால் மறு நாள் காலை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். போலிசார் வந்து விசாரித்த போது ஆஜர் எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார் என்று பெயரை மட்டும் குறிப்பிட்டு சொன்னேன். போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும பெற்று கொண்டார்கள் என்ன எழுதினார்கள் என்று

தெரியாது.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த** 14.05.2025 ம் தேதி நானனும் எனது மாமியார் சரஷவதியும் மளிகை கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு திரும்பிய போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன்பு சத்தம் போட்டு கொண்டிருந்தார் என்றும், ஏன் எங்கள் வீட்டின் முன்பாக சத்தம் போடுகிறாய் என்று கேட்டதற்கு என்னை தகாத வார்ரத்தையால் திட்டி காலால் உதைத்தும், கீழேதள்ளி விட்டார் என்றும், நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்என்றும கொலை மிரட்டல் விடுத்தார் என்றும போலிசார் விசாரணையிலும் புகார் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி ஒரே ஊர்க்காரர் என்பதாலும் அவருடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவரை இந்த வழக்கிலிருந்து தப்பிவிக்கும பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 377/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.2 P.W.2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரஸ்வதி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராமசாமி | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் செல்வபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி பைசல் சென்று விட்டோம். விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன்.கடந்த 2025 ம் வருடம் நானும் எனது மருமகள் அசா.1 இளவரசியும் இரவு 9.00 மணியளவில் மளிகை கடைக்கு சென்ற விட்டு திரும்பி வரம் போது எங்கள் வீடடின் அருகில் சத்தம் கேட்டது. என்ன என்று போய் பார்த்த போது இரவு நேரம் என்பதால் கூட்டத்தில் தவறி மருமகள் அசா.1 இளவரசி விழுந்து விட்டார். அதனால் அவருக்கு இடுப்பில் மொக்கை காயம் ஏற்பட்டது. இடுப்பு வலி அதிகமாக இருந்ததால் மறு நாள் காலை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த** 14.05.2025 ம் தேதி நானனும் எனது மருமகள் அசா.1 இளவரசியும் மளிகை கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு திரும்பிய போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன்பு சத்தம் போட்டு கொண்டிருந்தார் என்றும், ஏன் எங்கள் வீட்டின் முன்பாக சத்தம் போடுகிறாய் என்று கேட்டதற்கு என் மருமகள் அசா.1 ஐ தகாத வார்ரத்தையால் திட்டி காலால் உதைத்தும், கீழேதள்ளி விட்டார் என்றும், நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்என்றும கொலை மிரட்டல் விடுத்தார் என்றும போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி ஒரே ஊர்க்காரர் என்பதாலும் அவருடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவரை இந்த வழக்கிலிருந்து தப்பிவிக்கும பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 377/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 P.W.3 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் | தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிசாமி | ஜாதி |
| கிராமம் | : | | இனம் |
| தாலூக்கா | : | | வயது |
| Mail ID | : | | Mobile No. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் செல்வபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென் றுவிட்டேன். நான் எந்த சம்பவத்தையும் நேரில பார்க்கவில்லை. யார் யார் கிடையில் என்ன பிரச்சனை நடந்தது என்று தெரியாது., போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அசா.3 எனது அக்கா ஆவார்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த** 14.05.2025 ம் தேதி எனது அக்காவும், எனது அக்கா மருமகள் அசா.1 இளவரசியும் மளிகை கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு திரும்பிய போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டின் முன்பு சத்தம் போட்டு கொண்டிருந்தார் என்றும், ஏன் எங்கள் வீட்டின் முன்பாக சத்தம் போடுகிறாய் என்று என் அக்காவும் என் அக்கா மருமகளும் கேட்டதற்கு என் அக்கா மருமகளை ஆஜர் எதிரி தகாத வார்த்தையால் திட்டி காலால் உதைத்தும், கீழேதள்ளி விட்டார் என்றும், நைட்டியை பிடித்து இழுத்து

கிழித்து விட்டார்என்றும கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், போலிசார் விசாரணையிலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி ஒரே ஊர்க்காரர் என்பதாலும் அவருடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவரை இந்த வழக்கிலிருந்து தப்பிவிக்கும பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 377/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. P.W.4 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிசாமி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் செல்வபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு வயது 20 ஆகும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. ஒரு கையெழுத்துபோட்டேன். எதற்காக போட்டேன் என்று தெரியாது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **பார்வை மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.**என்னிடம் காட்டப்படும் கைக்கு அடக்கமான கல் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதுல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் நைட்டியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதுல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்னால் போலிசார் எந்த விதமான பொருளையும் கைப்பற்றவில்லை.

**அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 15.06.2025 ம்தேதி எங்கள் ஊரை சார்ந்த இளவரசி கொடுத்த புகாரின் பேரில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை எங்கள முன்னால் ஆய்வு செய்து மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு ஆதரவாக நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், சம்பவ இடத்தின் அருகில் கிடந்த கைக்கு அடக்கமான கல் ஒன்றை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையப்பம் கேட்டார்கள் என்றும், நானும் மணிகண்டன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், இளவரசி போட்டிருந்த கிழிந்த நிலையில் இருந்த நைட்டி ஒன்றை கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் மணிகண்டனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணை சொல்லிவிட்டு தற்சமயம் சமாதானமாகிட்டபடியால் ஆச்சரியை தப்பி விக்கும் பொருட்டு உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.